# ලංකා බැංකු සේවක සංගමය
# இலங்கை வங்கி ஊழியர் சங்கம்
# CEYLON BANK EMPLOYEES' UNION

ලියාපදිංචි අංකය
பதிவு இல :1151
**Registered No**

අංක 20, පන්සල පාර, කොළඹ 10. இல. 20, பன்சல வீதி, கொழும்பு 10, No. 20, Temple Road, Colombo 10
දුරකථන /தொலைபேசி/ Telephone:011-2693811/011-2674840, ෆැක්ස් /தொலைநகல்/ Fax: 011-2674840
E.Mail : cbeu@sltnet.lk, cbeu1@sltnet.lk, Web - www.cbeu.lk


(உள்ளகச் செய்தித் திரட்டு - அங்கத்தவர்களிடையே மாத்திரம்)

அன்பான சகோதர சகோதரிகளே, PU 2019/21

**ஊழியர் கடன் வட்டி மற்றும் நலன்புரிப் பலன்கள் மீது வரி விதிக்கப்படுவதற்கு எதிராக**

**அரச வங்கிகளில் தொழிற்படுகின்ற ஓய்வூதியத் திட்டங்களில் உள்ள பிரச்சினைகளைச் சரிசெய்தல் மற்றும் ஓய்வூதியம் இல்லாமல் இருக்கின்ற வங்கி ஊழியர்களுக்குத் தமது வயோதிகக் காலத்தில் வாழ்வதற்கு ஏற்ற ஓய்வூதியத் திட்டம் ஒன்றை நிறுவிக் கொள்வதற்காக**

# இலங்கை வங்கி ஊழியர் சங்கம் நாடு முழுவதும் ஆரம்பித்த தொழிற்சங்க நடவடிக்கைகள் பெரு வெற்றி பெற்றுள்ளன

**நிதியமைச்சு தனது நித்திரையில் இருந்து விழித்தெழுந்துள்ளது. 2019 ஜூன் 20ம் திகதி சங்கத்திற்கு கலந்துரையாடல் சந்தர்ப்பம் ஒன்று. தற்போதுள்ள நிலைமை தொடர்பில் ஜனாதிபதி அவர்களையும், பிரதமரையும் எதிர்க்கட்சித் தலைவரையும் அறிவுறுத்த சங்கம் நடவடிக்கை மேற்கொண்டது. எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்து உடனடி கலந்துரையாடலொன்று. 2019 ஜீன் 26ம் திகதி இடம்பெற்ற சங்கத்துடனான கலந்துரையாடலின் பின் எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்து விசேட ஊடக அறிக்கையொன்று.**

உங்களது அங்கத்துவப் பலத்தினை சரியாக உரசிப் பார்த்து வங்கி ஊழியர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்துகின்ற சகலவிதமான மரணப் பொறிகளுக்கும் எதிராக இலங்கை வங்கி ஊழியர் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்தமைக்கு காரணம், கலந்துரையாடல்களின் மூலம் பிரச்சினையினைத் தீர்க்கத் தவறிய அரசாங்கத்திற்கும் அமைச்சின் உயரதிகாரிகளுக்கும் உரிய பதில் ஒன்றை வழங்குவதற்காகும். அவ்வாறே அந்த தொழிற்சங்க நடவடிக்கைகளை இரண்டு கட்டங்களாக செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டதும் பிரச்சினையினைத் தீர்த்துக் கொண்டு வங்கித் துறையின் தொழில் நல்லுறவைப் பாதுகாத்துக் கொள்ள அனைத்து தரப்பினருக்கும் நியாயமான சந்தர்ப்பம் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காகும். முதற் கட்டத்தின் போது செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகளாக அங்கத்தவர்களையும் பொது மக்களையும் அறிவுறுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன் **2019 ஜூன் 18** ம் திகதி கொழும்பு நகரினுள் போஸ்டர்களைக் காட்சிப்படுத்தும் நடவடிக்கை வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டது. **2019 ஜூன் 25** ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்பு இலட்சினைகளை அணிந்து மௌனமாக எதிர்ப்பினை வெளியிடும் நடவடிக்கை தற்சமயம் மிகவும் வெற்றிகரமாக நாடு முழுவதும் இருக்கின்ற வங்கிக் கிளைகளில் செயற்படுத்தப்படுகின்றது.

சங்கத்தின் அழைப்பிற்கமைய வங்கித்துறையின் பொது நலனுக்காக சங்க பேதங்களைத் துறந்து உத்தியோகத்தர் பேதங்களைத் துறந்து அனைத்து வங்கி ஊழியர்களும் அந்த எதிர்ப்பு இலட்சினைகளை அணிந்து தமது வங்கித் துறையின் பெருமைமிக்க பலத்தினை உலகிற்கு வெளிப்படுத்தும் போது வழமை போன்று தமக்கு கிடைக்கின்ற விடயத்திற்காக மாத்திரம் நிற்கின்ற, தமது பொறுப்புக்கள் குறித்து மறந்து போன சிறு கூட்டம் ஒன்றும் இருந்தது என்றும் சங்கத்திற்கு அறியக் கிடைத்தது. அவர்கள் தமக்குத் தாமே வெட்டிக் கொள்ளும் பள்ளத்தின் விபரீதம் மிக விரைவிலேயே அறியக் கிடைக்கும் என்பதால் வங்கி ஊழியர்கள் என்ற முறையில் அவர்களது நன்மைக்காகவும் பொதுவில் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நாம் எமது பெருமிதமிக்க வங்கி ஊழியர்களிடம் வேண்டிக் கொள்கின்றோம்.

## ஆரம்பம் நற்சகுணங்களுடன்...

தற்போதைய அரசாங்கம் வங்கி ஊழியர்களின் வீட்டுக் கடன் சலுகை வட்டி உள்ளிட்ட நலன்புரிப் பலன்களுக்கு வரியை அறவிட்டு வங்கி ஊழியர்களுக்குரிய ஓய்வூதியப் பலன்களையும் கத்தரித்து ஊழியர்களைப் பாதுகாக்கவென்று இருக்கின்ற தொழிலாளர் சட்டங்களை நிர்வாகிகளின் தேவைக்கமைய திருத்தியமைத்து மேற்கொள்கின்ற சகலவிதமான நடவடிக்கைகளுக்கும் எதிராக நாட்டிலுள்ள வங்கி ஊழியர்களின் பதிலானது இடம்பெற்ற எதிர்ப்பு நடவடிக்கையின் மூலம் நன்கு வெளிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த எதிர்ப்பின் போது 1996ம் ஆண்டின் பின் இலங்கை வங்கியில், மக்கள் வங்கியில் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியில் இணைந்து கொண்ட ஊழியர்களுக்காக நிறுவப்பட்டுள்ள ஓய்வூதியத் திட்டத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளை சரிசெய்து கொள்ளவும் எவ்விதமான ஓய்வூதியத் திட்டங்களும் இல்லாத அரச மற்றும் தனியார் வங்கிகளில் ஓய்வூதியத் திட்டங்களை நிறுவுவதில் உள்ள தேவையும் நன்கு வெளிக்கொணரப்பட்டது. எதிர்ப்பு இலட்சினைகளை அணிந்து கடமையில் ஈடுபடுவதன் நோக்கம் வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் இதனை வெளிப்படுத்துவதற்காகும். அத்துடன் அவர்களுக்கு துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. அதற்கு இணையாக **2019 ஜூன் 27** ம் திகதி கொழும்பை அண்டிய அனைத்து புகையிரத நிலையங்களிலும் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கும் நடவடிக்கை மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

இவ்வனைத்து போராட்டங்களுக்கும் இடையில் ஆழ்ந்த நித்திரையில் இருந்து விழித்தெழுந்து கலந்துரையாடல்களைப் பெற்றுக் கொடுக்கவும் தற்போதுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வது தொடர்பில் கமிட்டிகளை நியமிக்கவும் நடவடிக்கைகள் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம். ஆனாலும் கடந்த காலத்தில் அரசாங்கங்கள் வழங்கிய கனவுலக மாடமாளிகை வாக்குறுதிகள் தொடர்பில் நன்கறியும் நாம் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் வரையில் தற்போது நடைமுறையில் இருக்கின்ற தொழிற்சங்க நடவடிக்கைகளை இடைநடுவில் நிறுத்தமாட்டோம் என்றும் அனைத்து அங்கத்தவர்களுக்கும் உறுதியளிக்கின்றோம். பிரச்சினைகளைத் தீர்ப்பதனை புறம் வைத்து பெயரளவில் கமிட்டிகளை நியமிப்பதன் மூலம் எந்தவொரு பலனும் கிட்டப் போவதில்லை என்றும் ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் வங்கித்துறையில் இருக்கின்ற பிரச்சினைகள் மிகுந்த நிலைமை தொடர்பில் சங்கம் ஜனாதிபதி அவர்களுக்கும், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பொறுப்புவாய்ந்த தரப்புக்களை அறிவுறுத்தியுள்ளது. அதன் போது எதிர்க்கட்சித் தலைவர் சங்கத்திற்கு துரிதமாக கலந்துரையாடல் ஒன்றைப் பெற்றுக் கொடுத்ததுடன் **2019 ஜூன் 26** ம் திகதி அந்த கலந்துரையாடல் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. சங்கம் முன்வைத்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்திய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், வங்கித்துறையில் தாக்கங்களை ஏற்படுத்துகின்ற பொது விடயங்கள் தொடர்பில், விசேடமாக அரச வங்கிகளைத் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிராக ஊடகச் சந்திப்பொன்றை நடாத்தி தனது நிலைப்பாட்டினை நாட்டிற்கு வெளிப்படுத்தினார். இந்த நிலைமையினை நாம் சிறந்த முன்னேற்றமாகக் காண்கின்றோம். ***இலங்கை வங்கி ஊழியர் சங்கத்திற்கு எந்தவொரு அரசியல் கட்சியையும், நபரையும் அரசியல் ரீதியில் விமர்சிக்கவோ அல்லது பாராட்டவோ எவ்வித தேவையும் இல்லை. ஆனாலும் யாதாயினும் ஓர் அரசியல் அலை நாட்டின் நன்மைக்காக முன்வருமாயின் அதனை மெச்சவும், நாட்டிற்கு பாதிப்பினை ஏற்படுத்தும் முறையில் செயற்படுமாயின் அதற்கு எதிராக நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டு போராடவும் சங்கம் தயாராகவுள்ளது என்றும் அனைத்து அங்கத்தவர்களுக்கும் உறுதியளிக்கின்றோம்.***

சங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற இந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் வங்கி ஊழியர்களின் நன்மைக்காக ஆரம்பிக்கப்பட்டவை. அத்துடன் அவை ஊழியர்களினதும் நிறுவனங்களினதும் எதிர்கால நன்மையினை உறுதிப்படுத்துவதற்காக பலமாத கால பொறுமையின் பின் மேற்கொள்ளப்பட்டது என்பதனை பொறுப்புடன் அறியத்தருகின்றோம். அதனால் இதற்கு மேலும் வங்கி ஊழியர்களை ஏமாற்றாது ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வுகளைப் பெற்றுத் தருவது ஆட்சியாளர்களினதும் அந்த நிறுவனங்களின் தலைவர்களினதும் பிரதான பொறுப்பாகும்.

தொழிற்சங்க நடவடிக்கைகளின் முதற்கட்டத்தின் கீழ் **2019 ஜூலை 02** ம் திகதி நாடு முழுவதும் போஸ்டர் காட்சிப்படுத்தல் வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவுள்ளதுடன் **2019 ஜூலை 03** ம் திகதி 24 பிரதான நகரங்களில் மதிய உணவு இடைவேளையின் போது (பி.ப 12.30 - 01.30 வரை) பணிப்பகிஷ்கரிப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் அனைத்து விபரங்களும் கிளைச் சங்க உத்தியோகத்தர் சபைக்கும் அனைத்து மாவட்ட அமைப்புக்களுக்கும் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால் அந்த அறிவுறுத்தல்களைச் சரியாகக் கடைப்பிடித்து இந்த போராட்டத்திற்கு தத்தமது பலத்தினை இயன்றளவில் வழங்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பிரதான நகரங்களில் இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டங்களின் பின் **2019 ஜூலை 08-12 ம் திகதிகளில்** கொழும்பு நகரிலுள்ள பிரதான வங்கிகளின் தலைமைக் காரியாலயங்களை மையப்படுத்தி 05 பணிப்பகிஷ்கரிப்பு ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து **2019 ஜூலை 10** ம் திகதி தெரிவு செய்யப்பட்ட உப நகரங்களில் பணிப்பகிஷ்கரிப்பு ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுவதுடன் அவ்வாறு ஏற்பாடு

செய்யப்படுகின்ற ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற வேண்டிய நகரங்கள், இடங்கள் மற்றும் நேரம் என்பன தொடர்பில் மாவட்ட அமைப்புக்களின் பிரதிநிகளின் ஊடாக அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும். சங்கத்தின் அனைத்து மாவட்டத் தலைவர்களினதும் ஒருங்கிணைப்புச் சக்தி மற்றும் ஒத்துழைப்பு உப நகரங்களில் ஏற்பாடு செய்யப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களை வெற்றி கொள்ளச் செய்ய மிகவும் அத்தியாவசியமானதாகும். அது தொடர்பிலான அனைத்து அறிவுறுத்தல்களும் கிளைச் சங்கங்களின் ஊடாகவும் நேரடியாகவும் மாவட்டத் தலைமைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் மேலதிக அறிவுறுத்தல்கள் தேவைப்படின் இலங்கை வங்கி ஊழியர் சங்க காரியாலயத்தினை 0112693801 மற்றும் 0112693811 இலக்கங்களின் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு தோழமையுடன் வேண்டுகின்றோம்.

எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு இலங்கை வங்கி ஊழியர் சங்க அங்கத்தவர்கள் மாத்திரமன்றி நாட்டிலுள் ஏனைய அனைத்து தனியார் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களைச் சார்ந்த ஊழியர்களும் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொடுக்க விருப்பம் தெரிவித்துள்ளன. ***தொழிற்சங்க நடவடிக்கைகளின் இரண்டாம் கட்டம் செயற்படுத்தப்படுவதற்கு முன்பாக*** வங்கித்துறையில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற இந்த பிரச்சினைகளுக்கு பேண்தகு தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்க ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் தவறும் பட்சத்தில் தொடர்ச்சியான வேலை நிறுத்தம் வரையில் செல்லும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியேற்படும். அவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கைகளினால் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுகின்ற சகலவிதமான அசௌகரியங்களுக்கும் பொறுப்புக் கூறவேண்டியது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளத் தெரியாத ஆட்சியாளர்களும் அதிகாரிகளுமே என்பதனையும் வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றோம்.

தொழிற்சங்க நடவடிக்கைகளின் அடுத்தகட்ட நிலைமை மற்றும் வேலைத்திட்டங்கள் தொடர்பான அறிவுறுத்தல்கள் கிளைச் சங்கங்கள் மற்றும் போரட்டக் கமிட்டி பிரதிநிதிகளின் ஊடாக அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் என்பதால் அந்த அறிவுறுத்தல்களை கடைப்பிடித்து வங்கி ஊழியர்களின் பெருமையினையும் பொறுப்பினையும் கடமையினையம் நிறைவேற்றுவதற்கு இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் பெருமைமிக்க கொடியின் கீழ் அணிதிரளுமாறு அனைத்து வங்கி ஊழியர்களிடமும் தோழமையுடன் வேண்டுகின்றோம்.

## வங்கித் துறையின் பொது நன்மைக்காக ஒன்றிணைந்து போராடுவோம் தீர்வு கிட்டும்வரை போராட்டத்தினைக் கைவிடாதிருப்போம்

## இலங்கை வங்கி ஊழியர் சங்கம் நெடுநாள் வெல்க !

இங்ஙனம் - தோழமையுடன்

***சன்ன திசாநாயக்க***
தலைவர்

2019-06-28

***ரஞ்சன் சேனாநாயக்க***
பொதுச் செயலாளர்

## சங்கத்தின் இணையத்தளம்

**தற்சமயம் சங்கத்தின் இணையத்தளமானது செயற்பட்டுவருகின்றது. அதனால் சங்கம் தொடர்பான தகவல்கள், அங்கத்தவர் விண்ணப்பங்கள், புலமைப்பரிசில்கள், மரணஉதவிகள், பிள்ளைப்பேறு போன்ற விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள www.cbeu.lk எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்குமாறு அறியத்தருகின்றோம்.**

# ஆர்ப்பாட்ட அறிவுறுத்தல்கள்

| | |
|---|---|
| 2019<br>ஜூலை 03<br>புதன்கிழமை | பி.ப 12.30<br>முதல்<br>பி.ப 01.30<br>பகல் உணவு (இடைவேளை) |

| மாவட்டம் | பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெறவேண்டிய நகரம் | மாவட்டம் | பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெறவேண்டிய நகரம் |
|---|---|---|---|
| அம்பாறை | அம்பாறை | கேகாலை | கேகாலை |
| அனுராதபுரம் | அனுராதபுரம் | குருநாகல் | குருநாகல் |
| பதுளை | பதுளை | மாத்தளை | மாத்தளை |
| மட்டக்களப்பு | மட்டக்களப்பு | மாத்தறை | மாத்தறை |
| காலி | காலி | மொனராகலை | மொனராகலை |
| கம்பஹா | கம்பஹா | நுவரெலியா | நுவரெலியா |
| அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை | பொலனறுவை | கதுறுவெலை |
| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | சிலாபம்/புத்தளம் | சிலாபம்கூபுத்தளம் |
| களுத்துறை | களுத்துறை | இரத்தினபுரி | இரத்தினபுரி |
| கண்டி | கண்டி | திருகோணமலை | திருகோணமலை |
| | | வன்னி | வவுனியா |

01 மாவட்டத் தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள போராட்ட பதாகைகளை பணிப்பகிஷ்கரிப்பின் போது பயன்படுத்துங்கள் (வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் பயன்படுத்தலாகாது)

02 அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள துண்டுப்பிரசுரங்களை பணிப்பகிஷ்கரிப்பின் போது பொது மக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.

03 போராட்டத்தின் போது அனுப்பிவைக்கப்பட்டுள்ள போராட்ட வாசகங்களைப் பயன்படுத்துங்கள்.

04 போராட்டத்திற்குத் தேவையான ஏனைய வசதிகள் (மெகாபோன், தண்ணீரப் போத்தல்கள் என்பவற்றை தேவைப்படின் மாவட்ட அமைப்பிடம் இருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.)

05 மாவட்ட அமைப்பின் அனைத்து வங்கிக் கிளைகளையும் இதில் பங்கெடுக்கச் செய்யுங்கள்.

06 போராட்டத்திற்காக நகரின் மிகவும் ஜனசந்தடிமிக்க இடத்தினைப் பயன்படுத்துங்கள்.